மாண்புமிகு திரு. கோ. சி. மணி: பேரவைத்தலைவர் அவர்களே தொடர்பில்லா வினா, தனிக் கேள்வி எழுப்பவும்.

திரு எஸ். ஆர். இராதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் இப்போது நான்கு இடங்களில் பேருந்து நிலையங்கள் இருப்பதாகத் தெரிகிறது. திருவள்ளுவர் போக்கு வரத்து பேருந்து நிலையம், நகரப் பேருந்து நிலையம் ,பெரியார் பேருந்து நிலையம், அண்ணா பேருந்து நிலையம் என்று இப்படிப் பல்வேறு இடங்களில் பேருந்து நிலையங்கள் இருக்கின்ற காரணத் தால் பயணிகள் பல்வேறு கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளாகிறார்கள். எனவே அனைத்தையும் ஒன்றாக இணைத்து எல்லா வசதிக ளோடு சேர்த்து, பேருந்து நிலையங்கள் அமைப்பதற்கான அந்தத் திட்டக் குறிப்பு இருக்கிறதா? அல்லது திருவள்ளுவர் பேருந்து நிலையம் போன்ற பேருந்து நிலையங்கள் தனியாகத் தான் இருக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: அப்படிப்பட்ட செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் கவனத்தில் இல்லை.

அனுமதியின்றி விசை இறவை மூலம் தண்ணீர் எடுத்தல்.

*2088 திரு ஏ. கணேசமூர்த்தி:

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) கீழ்பவானி அணைக்கு வந்துசேரும் தண்ணீரும், அணை யிலிருந்து வெளியேறும் நீரும் அரசு அனுமதியின்றி விசை இறவை மூலம் எடுக்கப்படுவது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): விசை இறைவைகளை அனுமதியின்றி வைத்திருப்பது பற்றிய பிரச்சினை அரசின் பரிசீலனையில் உள்ளது. பொதுவாகவே இப்படி அன்—ஆதரைஸ்டு பம்ப்செட்டு கள் கீழ்பவானியைச் சேர்ந்த பகுதிலேயும், அதுமட்டுமல்லாமல் இன்னும் சேலம் மாவட்டத்திலே ராஜக்கால்வாய், மோகனூர் சேனல், போன்ற பகுதிகளிலேயும் மூலவகை போன்ற பகுதிகளி லேயும் வைத்திருக்கிறார்கள். இதற்கு ஒட்டுமொத்தமாக ஒரு முடிவு எடுக்கவேண்டும். எனவே இதுகுறித்து ஆய்ந்து ஒரு அறிக் கையை அரசுக்கு அனுப்பவேண்டும் என்று தலைமைப் பொறி

1990 மே 10]

யாளருக்கு அரசு கட்டளை பிறப்பித்து இருக்கிறது. அவர்களுடைய அறிக்கை கிடைத்தவுடன், இதுகுறித்து இறுதி முடிவு எடுக்கப் படும்.

திரு. ஏ. கணேசமூர்த்தி: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இந்த கீழ் பவானி அணைக்கு வந்து சேரும் தண்ணீரி லிருந்து அனுமதி இல்லாமல் தண்ணீர் எடுப்பவர்கள் ஒரு பெரிய நிதி நிலையை உருவாக்கி, லட்சக்கணக்கிலே அதிலே முதலீடு செய்து, தண்ணீரை எடுக்கிறார்கள். அதற்கு அரசு நிதி நிறுவனங் களும், அதேபோல் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளும் நிதி உதவி செய்கின்றன. இதைத்தடுப்பதற்கு அல்லது நிதி உதவி செய்யாமல் இருப்பதற்கு அரசு அவர்களுக்கு அறிவுரை வழங் குமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, வங்கிகள் பணம் கொடுப்பதை நாம் தடுக்க முடியாது. பொதுவாகவே, கீழே இருக்கிற ஆயக்கட்டுகள் பாதிக்கக்கூடாது என்பது அரசினு டைய கொள்கை. ஆனால் வருகிற தண்ணீரிலே இப்படி திருட்டுத் தனமாக தண்ணீரை எடுத்துவிடுகிறார்கள். ஏற்கனவே ஒரு முறை 1469 அன்-ஆதரைஸ்டு பம்ப்செட்டுகளுக்கு கீழ் பவாணி பகுதியிலே ஒரு அனுமதியை அரசே வழங்கி இருக்கிறது. எனவே அவர்களுக்கு ஒரு எண்ணம், நாமும் வைத்துக் கொண்டு இருப் போம், கொஞ்சநாட்கள் போனவுடன், அரசு, விவசாயப் பிரச் சினை, எப்படி விரட்ட முடியும், நம்மையும் அவர்கள் ஒத்துக்கொள் வார்கள், அனுமதி அளிப்பார்கள் என்ற எண்ணத்தில் அவர்கள் பம்ப்செட்டை வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். அதனால் பல பிரச்சினைகள் உருவாகியிருக்கின்றன என்பதை நான் மறுக்க வில்லை. நீண்டகாலமாக ராஜாகால்வாய், மோகனூர் கால்வாய் போன்ற பகுதிகளிலே இந்த பிரச்சினை இருக்கிறது. நானே பல இடங்களுக்குச் சென்று இந்த அன்-ஆதரைஸ்டு பம்ப்செட்டுகளை எப்படி அவர்கள் இயக்குகிறார்கள் என்பதைப்பார்த்துவிட்டு வந்தேன். எனவே தான் அரசு இது குறித்து ஒட்டுமொத்தமாக ஒரு முடிவு எடுக்கவேண்டும். இது விவசாயிகள் பிரச்சினை என்கிற காரணத்தால், இந்த அரசு சிறிது நீக்குபோக்குகளைக் கடைப்பிடிக்கவேண்டிய நிலையில் இருக்கிறது என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. கணேசமூர்த்தி: பேரவைத்தலைவர் அவர்களே, அனுமதி இல்லாமல் தண்ணீர் எடுப்பதன் மூலமாக கீழ் பவானி பாசன ஆயக்கட்டுகளும், அதே போன்று காலிங்கராயன் பாசன ஆயக்கட்டு விவசாயிகளும் பெரிதுமாக பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதையும், அவர்களுக்கு நிவாரணம் அளித்து அந்தப் பாதிப்பிலிருந்து பாதுகாப்பதற்கு இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கையை எடுக்க இருக்கிறது என்பதையும் நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, கீழே இருக்கிற ஆயக்கட்டுகள் பாதிக்கப்படுகிறது என்பதை நான் மறுக்கவில்லை. இந்த முறையற்ற பாசனத்தின் மூலம் அன்-ஆதரைஸ்டு பம்புசெட்டுக்காரர்கள் தண்ணீரை அவர்கள் வயலுக்கு பாய்ச்சினால்கூட பரவாயில்லை. அடுத்து இருக்கிற வயலுக்கு தண்ணீரை விற்கிறார்கள். அதுவும் அரசுக்குத் தெரியும். நான் மாண்புமிகு உறுப்பினர் கணேசமூர்த்தி அவர்களுக்கு விளக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். நாளைக்கு மறுதினம்கூட அரசு 24 மணிநேரத்தில் அதை கட்டுப்படுத்த முடியும். ஆனால் அவர்களே, நாளைக்கே படை எடுத்து, வந்து கணேசமூர்த்தியை பார்த்து. இந்த முறை எப்படியும் எங்களுக்கு அனுமதி அளிக்க வேண்டும் பயிர்கள் காய்கின்றன என்று அவர்கள் வருவார்கள், அதற்கு அரசாங்கத்திற்கு வந்து விண்ணப்பிப்பதற்கு நிறைய பேர்கள் இருக்கிறார்கள். எனவேதான் இதுகுறித்து அவர்களுக்குத் தெரிவித்து யாருக்கும் பாதகம் ஏற்படாத வண்ணம், விவசாயிகள் பாதிக்காத வண்ணம் ஒரு முடிவினை அரசு மேற்கொள்ள இருக்கிறது.

மின் பற்றாக்குறையைப் போக்க மத்திய அரசின் உதவி.

* 3905 திரு. எஸ். ஏ. தங்கராஜன் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா;

(அ) தமிழ்நாட்டில் நிலவும் மின் பற்றாக்குறையைப் போக்க மத்திய அரசின் உதவி கோரப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 630 மெ.வா. திறன் கொண்ட கடலூர் அனல் மின் நிலையம், 420 மெ.வா. திறன் கொண்ட சென்னை அனல் மின்நிலையம் இரண்டாவது கட்டம் மற்றும் 196 மெ.வா. திறன் கொண்ட கடலூர் வாயு சுழலி மின் திட்டம் ஆகியவற்றிற்கு உடனடியாக அனுமதியளிக்குமாறு மைய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும் காவிரிப் படுகையில் கிடைக்கும் இயற்கை வாயு முழுவதையும் மின் உற்பத்திக்கு அளிக்க வேண்டுமென மைய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS